# தாய்மொழி தமிழ்

## தரம் - 04

### முதலாம் தவணை

**2022ஆம் ஆண்டில் இழந்த காலத்தை மீளமைக்கும் வேலைத்திட்டம்**

**Recovery Plane for Learning Loss – 2022**

**முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை**

**தேசிய கல்வி நிறுவகம்**

**இலங்கை**

**நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான ஆரம்பக் கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்வியில் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியாவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியாவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும்

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியாவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றைத் தவிர்த்து அவசியமான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இலகுவான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு. மாற்றங்களைச் செய்ய வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியாவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. அத் தவணைக்குரிய பாடப்பரப்பில் உள்ள அத்தியாவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவுபடுத்தப்பட்டு பின்னர் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவுபடுத்தப்பட்ட செயற்பாடுகளை வீட்டில் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர்ப்படும் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்.

**தாய்மொழி தமிழ்  தரம் - 4**

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.**<br><br>**எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.** | காட்சிப் படங்களைப் பார்த்து,வாக்கியங்களை நிகழ்காலத்தில் பிழையின்றி எழுதி வாசிப்பார். | காட்சிப் படங்களைப் பார்த்து வாக்கியங்களை எழுதி வாசித்தல் (நிகழ் காலத்தில்) | செயற்பாடுகள் - 4,5 | 17 - 18 | 30 நிமி |
| | | கதைப்படங்களைப் பார்த்து வாக்கியங் களை இறந்த காலத்தில் எழுதி வாசிப்பார். | கதைப் படங்களைப் பார்தது் வாக்கியங்களை எழுதி வாசித்தல் (இறந்த காலத்தில்) | செயற்பாடுகள் - 6 | 18 - 19 | 1 மணி |
| | | ஒலி வேறுபாட்டுச் சொற்களை இனங்கணடு உரிய முறையில் பிரயோகிப்பார். | ஒலி வேறுபாட்டுச் சொற்களை.'. வாக்கியங்களை வாசித்தலும் எழுதுதலும் | செயற்பாடுகள் 7,8,9 | 20 - 24 | 2 மணி |
| | | ஒருமை, பன்மைச் சொற்களை இனங் கண்டு வாக்கியங்களில் உரிய முறையிற் பிரயோகிப்பார். | ஒருமை, பன்மைச் சொற்களை.'. வாக்கியங்களை வாசித்தலும் எழுதுதலும் | செயற்பாடுகள் - 10 | 24 --26 | 30 நிமி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.**<br><br>**பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.**<br><br>**வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.**<br><br>**எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.** | ஒத்தகருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள், ஆகியவற்றை இனங்கணடு கொள்வார். அவற்றை உரிய வகையில் பயன்படுத்துவார்.<br><br>திணை, பால், எண் இடம், காலம் ஆகியவற்றை அறிந்து உரிய வகையில் பயன்படுத்துவார்.<br><br>எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவற்றை அறிந்து அவற்றை வாக்கியங்களிற் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | ஒத்தகருத்துச் சொற்கள் | செயற்பாடுகள் - 1,2 | 28 -29 | 1 மணி |
| | | | எதிர்க்கருத்துச் சொற்கள் | செயற்பாடுகள் - 3,4,5 | 29-31 | 1 மணி |
| | | | எதிர்ப்பாற் சொற்கள் (ஆண்பால், பெண்பால்) | செயற்பாடுகள் - 6,7,8 | 31-32 | 1 மணி |
| | | | திணை, பால், எண் இடம், காலம் | செயற்பாடுகள் - 9,10,11,12,13 | 33-37 | 2 மணி |
| | | | எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் | செயற்பாடுகள் - 14 | 41-42 | 1 மணி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.** | அடைமொழிகளை அறிந்து, அவற்றைப் பொருத்தமுற வாக்கியங்களில் பயன்படுத்துவார். | எழுவாய், பயனிலை அடைமொழிகள் | செயற்பாடுகள் - 15 | 43 - 44 | 1 மணி |
| | **பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.** | பெயர்ச் சொற்கள் வினைச்சொற்கள் ஆகியவற்றின் வேறுபாடுகளை அறிந்து பிரயோகிப்பார். | பெயர்ச்சொல், வினைச்சொல் | செயற்பாடுகள் - 16,17 | 44 - 46 | 2 மணி |
| | **வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.** | | | | | |
| | **எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.** | வாக்கியங்களில் நிறுத்தக்குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி) இடுவதன் முக்கியத் துவத்தை உணர்ந்து பொருத்தமுறப் பயன்படுத்துவார். | நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி) | செயற்பாடுகள் - 18 | 47 -48 | 1 மணி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.**<br><br>**விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார்.** | பாடல்கள், கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை வாசித்துப் புரிந்து கொள்வார்.<br>பாடலின் கருத்தினை அறிந்து கொள்ள முனைவார்.<br><br>சிறுவர் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள், பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய சொற்கள், மாணவரைக் கவர்ந்த சிறிய உரையாடல் வரிகள் ஆகியவற்றைப் பிழையின்றி எழுதுவார்.<br>விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.<br>வினாக்களுக்கு விடையெழுதுவார். | சிறுவர் பாடல்கள்<br><br>சிறுவர் கதைகள்<br><br>மீட்டற்பயிற்சிகள் | செயற்பாடுகள் - 1,.2,3,4,5<br><br>செயற்பாடுகள் - 6,7<br><br>செயற்பாடுகள் பயிற்சிகள்(1 - 15) | 59 - 62<br><br>63 – 64<br><br>65 – 69<br><br>70 - 74 | 2 மணி<br><br>2 மணி<br><br>2 மணி<br><br>2 மணி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.** | சிறிய, அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை விளங்கி அவற்றுக்கேற்ப துலங்குவார். | அறிவித்தல்கள் | செயற்பாடுகள் - 1 | 76 | 1 மணி |
| | | | அறிவுறுத்தல்கள் | செயற்பாடுகள் - 2,3 | 77 - 78 | 1 மணி |
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்** | கட்டளைகளைச் செவிமடுத்து அதற்கேற் பத் துலங்குவார். | கட்டளைகள் | செயற்பாடுகள் - 3 | 79 | 1 மணி |
| | | தகவல்களை அறிந்து கொள்வதுடன் தெளிவாக எழுதிச் சமர்ப்பிப்பார். | தகவல்கள்/ குறிப்புக்கள் | செயற்பாடுகள் - 4 | 80 | 1 மணி |
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகப் வாசிப்பார்** | சுயவிபரப் படிவத்தை பிழையின்றிச் சுருக்கமாகப் பூர்த்தி செய்ய முன்வருவார். | சுய விபரம் / படிவங்கள் | செயற்பாடுகள் - 6 | 81 | 1 மணி |
| | **நாளாந்த தேவைகளை நிறைவு செய்வதற்காகப் எழுதுவார்** | பாரம்பரியக் கடிதம் / நவீன கடிதம் எழுதும் முறையை அறிந்து உரிய முறையில் பிரயோகிப்பார். | கடிதம் (பாரம்பரிய / நவீன) | செயற்பாடுகள் - 2,3 | 81 – 83 | 2 மணி |
| | | மின்னஞ்சல்கள் / குறுஞ்செய்திகளை எழுதுவார். | மின்னஞ்சல் / குறுஞ்செய்தி | செயற்பாடுகள் - 4 | 84 | 30 நிமி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **சொற் களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.** | மரபுச் சொற்களை அறிந்து உரியமுறையில் பிரயோகிப்பார். | மரபுச் சொற்கள் | செயற்பாடுகள் - 2,3 | 87 -88 | 1 மணி |
| | **சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.** | இணைமொழிகளை அறிந்து உரிய வகையிற் பிரயோகிப்பார். | இணைமொழிகள் | செயற்பாடுகள் - 4 | 88 | 30 நிமீ |
| | **சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.** | இரட்டைக் கிளவியை அறிந்து உரிய வகையிற் பிரயோகிப்பார். | இரட்டைக் கிளவி | செயற்பாடுகள் - 5 | 88-89 | 30 நிமி |
| | **சொற் களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.** | விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைப்பதோடு ஆர்வத்துடன் விடுவிப்பார். | விடுகதைகள் | செயற்பாடுகள் - 6 | 89-90 | 1 மணி |

| அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற் பேறுகள் | உள்ளடக்கம் | செயற்பாடுகள் | ஆசிரியர் வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | | பழமொழிகளை அறிந்து உரிய வகையிற் பிரயோகிப்பார். | பழமொழிகள் | செயற்பாடுகள் - 7 | 90 -91 | 1 மணி |
| | | குறியீடுகளை / சுருக்கக் குறியீடுகளை இனங் காண்பதோடு விளங்கிப் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | குறியீடுகள் / சுருக்கக் குறியீடுகள் | செயற்பாடுகள் - 8,9 | 92 | 30 நிமி |
| | | தொடர்மொழிக்கு ஒரு மொழியை அறிந்து எழுதுவார். | தொடர்மொழிக்கு ஒரு மொழி | செயற்பாடுகள் - 10 | 93 | 30 நிமி |
| | | தெரிவுசெய்யப்பட்ட சொற்களைக் கவனமாகச் செவிமடுத்துப் பிழையின்றி எழுதுவார். | சேர்த்தெழுதல் | செயற்பாடுகள் - 11 | 93-95 | 30 நிமீ |

**தாய்மொழி - 35 மணித்தியாலங்கள்**